# செப்டம்பர் - 26 - செவ்வாய்

## புனிதர்கள் கொஸ்மாஸ் மற்றும் டேமியன்
“இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகிறவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்”( லூக் 8:21)

## முதல் வாசகம் : எஸ்ரா6 : 7 – 8, 12, 14 – 20

கடவுளின் கோவிலைக் கட்டும் பணியைத் தடைசெய்யாதிருங்கள். யூதர்களின் ஆளுநரும், யூதர்களின் மூப்பர்களும் கடவுளின் கோவிலை, அது முன்பு இருந்த இடத்தில், மீண்டும் எழுப்பட்டும்.யூதர்களின் மூப்பர் கடவுளின் கோவிலைக் கட்டுவதற்கு நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி ஆணை பிறப்பிக்கின்றேன். அவர்கள் வேலை தடைப்படாதபடி, அதற்கான முழுச்செலவைப் பேராற்றின் அக்கரைப் பகுதியிலிருந்து வரும் வரியாகிய அரச வருவாயினின்று கொடுக்கவேண்டும். எந்த மன்னராவது, மக்களாவது இவ்வாணையை மாற்றவோ எருசலேமிலுள்ள கடவுளின் கோவிலை அழிக்கவோ முற்பட்டால், தமது பெயரை அங்கு விளங்கும்படி நிலைநாட்டிய கடவுள் அவர்களை அழிப்பாராக! தாரியு என்னும் நானே இக்கட்டளையைப் பிறப்பித்தேன். இது சரிவர நிறைவேற்றப்படட்டும். இறைவாக்கினர் ஆகாயும் இத்தோவின் மகன் செக்காரியும் இறைவாக்கு உரைத்ததன் விளைவாக யூத மூப்பர்கள் கோவிலைக் கட்டினர் வேலையும் முன்னேறிக்கொண்டிருந்தது. இஸ்ரயேலின் கடவுளது ஆணையாலும், பாரசீக மன்னர்களான சைரசு, தாரியு, அர்த்தக்சஸ்தா ஆகியோரின் கட்டளையாலும் அவர்கள் கட்டடப்பணியை முடித்தனர். மன்னர் தாரியு ஆட்சியின் ஆறாம் ஆண்டிலே, அதார் திங்கள் மூன்றாம் நாளிலே, கோவில் வேலை நிறைவுற்றது.இஸ்ரயேல் மக்கள், குருக்கள், லேவியர், அடிமைத் தனத்திலிருந்து திரும்பிவந்த ஏனையோர், கடவுளின் கோவில் அர்ப்பண விழாவை அக்களிப்புடன் கொண்டாடினார்கள். 7 கடவுளின் கோவில் அர்ப்பண விழாவில் நூறு காளைகளையும், இருநூறு செம்மறிக்கிடாய்களையும், நானூறு செம்மறிக் குட்டிகளையும் ஒப்புக் கொடுத்தார்கள் இஸ்ரயேல் குலக்கணக்கின்படி பன்னிரண்டு வெள்ளாட்டுக் கிடாய்களை இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் பாவம் போக்கும் பலியாகச் செலுத்தினார்கள்.மோசேயின் நூலில் எழுதியுள்ளபடி எருசலேமில் கடவுளின் பணிக்காகக் குருக்களை அவர்களின் பிரிவின்படியும் லேவியரை அவர்களின் துறைகளின்படியும் அவர்கள் நியமித்தனர். மேலும் அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த மக்கள் பாஸ்கா விழாவை முதல் மாதத்தின் பதினான்காம் நான் கொண்டாடினர்.குருக்களும் லேவியரும் ஒன்றிணைந்து தங்களைத் தூய்மைப்படுத்திகொண்டனர். அவர்கள் தூய்மையானார்கள். அடிமைத் தனத்திலிருந்து திரும்பி வந்திருந்த எல்லா மக்களுக்காகவும், சகோதரக் குருக்களுக்காகவும், தங்களுக்காகவும் அவர்கள் பாஸ்கா ஆட்டுக்குட்டியைக் கொன்றனர்

**பதில்பாடல்:** மகிழ்ச்சியுடன் ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்

## நற்செய்தி : லூக்கா 8 : 19 - 21

அக்காலத்தில் இயேசுவின் தாயும் சகோதரர்களும் அவரிடம் வந்தார்கள். ஆனால் மக்கள் திரளாக இருந்த காரணத்தால் அவரை அணுகமுடியவில்லை. ”உம்தாயும், சகோதரர்களும் உம்மைப் பார்க்க விரும்பி வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள்” என்று அவருக்கு அறிவித்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து, ”இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகிறவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்” என்றார். ஒரு நாள் இயேசுவும் அவருடைய சீடர்களும் படகில் ஏறியதும், ”ஏரியின் அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள்” என்று அவர் அவர்களுக்குச் சொன்னார். அவர்களும் படகைச் செலுத்தினார்கள்.

**தியானம்:** யேசு இறை பணியாற்ற வந்தவர். அவர் கடவுளின் மகன், இறை சித்தம் நிறைவேற்றவே இவ்வுலகிற்கு வந்தார். நற்செய்தியில் யேசு இறை சித்தம் நிறைவேற்றுபவர்களே தம் தாயும் சகோதரர்களும் என்கிறார். அன்னை மரியா இறை சித்தம் நிறைவேற்றவில்லையா?. திருமணம் ஆகாமலே யேசுவை உதரத்தில் தாங்க சம்மதிப்பது என்பது இயலாத காரியம். ஆனால் கூடி இருந்த மக்கள் முன்னிலையில் தமது உறவை விட, தம்மை தேடி வந்தவர்களின் தேவைகளை பூர்த்திசெய்வதை அவர் பெரிதாக எண்ணினார். இது தவறா? பிற சமய மக்கள் இப்பகுதியைத்தான் மையமாக வைத்துப் பேசுவார்கள். யேசுவின் இவ்வுலக வாழ்வில் அன்னை மரியாதான் தாய். அதனை மாற்ற முடியாது. ஆனால் பொதுவாழ்வில் எல்லா அன்னையரும் அவருக்கு தாயே! 12 வயதில் ஆலயத்தில் காணாமல் போனபோது ஏன் என்னை தேடினீர்கள் என்று கேட்கவில்லையா? யேசு அன்னை மரியாவை புறக்கணித்தார் என்று சொல்வது முற்றிலும் தவறு. எனவே நாமும் அவ்வாறான தப்பான எண்ணம் கொண்டவர்களாக வாழாமல், யேசுவின் வார்த்தையின்படி வாழ்வோமாக.